விகடன்

# அராஜகம்... அத்துமீறல்... காவல் மரணங்கள்! - போலீஸாரைத் தட்டிவைப்பாரா முதல்வர்?

19.07.2023 | 6 PM



கோவை டி.ஐ.ஜி விஜயகுமார் தற்கொலையைத் தொடர்ந்து, காவல்துறையினருக்கு விடுமுறை உள்ளிட்ட சலுகைகளை மறுக்காமல் கொடுக்க வேண்டும் என்று காவல்துறையினருக்கு உத்தரவிட்டார் முதல்வர்

**“நாட்டை போலீஸ்** கையில் கொடுத்துவிட்டு என்ன செய்து கொண்டிருக்கிறார் முதல்வர்?”- இது அ.தி.மு.க ஆட்சியில் தொடர்ந்து காவல் மரணங் கள் நிகழ்ந்தபோது, முதல்வர் எடப்பாடி பழனிசாமியை நோக்கி அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் எழுப்பிய கேள்வி. வெறும் இரண்டே ஆண்டுகளில் பூமராங்-போல அதே கேள்வி இன்றைய முதல்வர் ஸ்டாலினை நோக்கித் திரும்பியிருக்கிறது.

**தொடரும் போலீஸ் அத்துமீறல்கள்!**

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் தமிழ்நாட்டில் காவல்துறையின் அத்துமீறல்கள் கவலை தரும் அளவுக்கு அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து, காவல்துறைக்கு எதிராகக் கண்டனக் குரல் எழத்தொடங்கியிருக்கிறது.

கடந்த வாரம் சென்னை எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலையத்துக்குத் திருட்டு வழக்கு தொடர்பான விசாரணைக்காக ஸ்ரீதர் என்ற இளைஞரை அழைத்துச் சென்றிருக்கிறார்கள் போலீஸார். விசாரணை முடிந்து வீட்டுக்குத் திரும்பிய அவர், நிடீர் நெஞ்சுயவியால் நூடிக்க மருத்துவாதனைக்கு அழைத்துச் சென்லும் வழியிலேயே உயிரிழந்திருக்கிறார். போலிஸார் கொடுத்த பார்ச்சரால்தான் தன் கணவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதாக ஸ்ரீதரின் மனைவி கூறியிருக்கிறார். ஆனால், அளவுக்கு அதிகமாக மது அருந்தியதுதான் ஸ்ரீதரின் இறப்புக்குக் 'காரணம்' என்கிறது காவல்துறை தரப்பு.

கடந்த சில தினங்களுக்கு முன்பு மதுரை உசிலம்பட்டி பகுதியைச் சேர்ந்த கட்டடத் நொழிலானி வேடன் சினியா பார்த்துவிட்டு நள்ளிரவின் வீட்டுக்குத். திரும்பிக்கொண்டிருந்தார். அவரைச் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கு அழைத்துச் சென்ற எம்.கல்லுப்பட்டி போலிஸார், ஸ்டேரில்வைத்து விசாரித்துவிட்டுத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். வீட்டுக்குச் சென்று படுத்து உறங்கிய லேடன் காலையில் உயிரிழந்துவிட்டார் 'விசாரணை என்ற பெயரில் போலீஸார் வேடனைத் தாக்கியதுதான் அவரின் மரணத்துக்குக் காரணம்' என அவரின் உறவினர்கள் கதற,

'அப்படியெல்லாம் இல்லை.. வேடன் இதய நோயாய்தான் மரணமடைத்தார்' என்று சொல்கியிருக்கிறது காவல்துறை.

விளிம்புநிலை மனிதர்களை மட்டுமன்றி, அரசியல் செல்வாக்குள்ள வசதியானவர்களையும் காவல்துறை சித்ரவதை செய்கிறது என்பதற்கு உதாரனால், கடந்த பாதம் பட்டுக்கோடடையில் நடந்த சம்பவம் பட்டுக்கோட்டையைச் சேர்ந்த நகைக்கடை உரிமையாளரும், இந்திய கம்யூனிஸ்ட் பிரமுகருமான ராஜசேகரனையும், அவரின் மனைவியையும் கடந்த ஜூங்ள் 22-ம் தேதி திருட்டு நகை வாங்கியது தொடர்பான வழக்கில் விசாரணைக்காக அழைத்துச் சென்றிருக்கிறார் திருச்சி கே.கே.நகர் குற்றப்பிரிவு எஸ். மாவிமரணைக்குப்பிறகு வீட்டுக்குத் திரும்பிய ராஜசேகரன், ஜூன் 25 ம் தேதி ரயில் முன்பு பாய்ந்து தற்கொலை செய்துகொண்டார். "விசாரகனயின்போது, ராஜசேகரன் அவர் மனைவியின் முன்னிலைபிலேயே கடுமையாகத் தாக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டதே அவரது மரணத்துக்குக் காரணம்" என்று உறவினர்கள் குற்றம்சாட்டினார்கள். கூடவே அவர்களிடம் லஞ்சமாக நகை கேட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்ததால், அந்த எஸ்.ஐ ஆயுதப்படைக்கு மாற்றப்பட்டார்.

**அதிகரிக்கும் லாக்கப் மரணங்கள்!**



**விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும் பொதுமக்களை, தமிழ்நாடு காவல்துறை மனிதநேயமற்ற முறையில் கையாளுகிறது என்ற குற்றச்சாட்டு தீவிரமடைந்திருப்பது குறித்து, காவல் சித்ரவதைக்கு எதிரான கூட்டியக்கத்தின் சட்ட ஆலோசகர் ஹென்றி டிபேனிடம் பேசினோம்.** அவர் நம்மிடம், “2021-ம் ஆண்டு முதல் தற்போது வரை 16 போலீஸ் கஸ்டடி மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. தி.மு.க ஆட்சிக்காலத்தில் மட்டும் 12 மரணங்கள். இவை தவிர, இந்த ஆண்டு தொடக்கம் முதல் தற்போதுவரை 15 போலீஸ் சித்ரவதைகள் பதிவாகியிருக்கின்றன. பதிவுசெய்யப்படாத, வெளியில் தெரியாத சித்ரவதைகள் எத்தனையோ… தெரியவில்லை. பெரும்பாலான போலீஸ் உட்கோட்டங்களில் ஒரு குறிப்பிட்ட பழைய கட்டடத்தை, சித்ரவதைக் கூடமாகப் போலீஸார் பயன்படுத்துவது தொடர்கிறது. அவற்றையெல்லாம் ஆய்வுசெய்து மூடாமல், காவல் சித்ரவதைகளைக் குறைக்க முடியாது. அதேபோல, அனைத்துக் காவல் நிலையங்களிலும் சிசிடிவி முறையாகப் பயன்பாட்டில் இருப்பதை உயரதிகாரிகளும், அரசுத் தரப்பும் உறுதிசெய்ய வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, காவல்துறையினர் செய்யும் தவறுகளை மறைக்கும் வேலையை அரசு செய்யவே கூடாது. உதாரணமாக, விசாரணைக்கு வந்தவர்களின் பற்களைப் பிடுங்கிய பல்வீர் சிங் வழக்கில் இன்னும் கைது நடவடிக்கையே எடுக்கப்படவில்லை. தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு தொடர்பாக நீதியரசர் அருணா

ஜெகதீசன் ஆணையம் நடவடிக்கைக்குப் பரிந்துரை செய்த அதிகாரிகள்மீதுகூட இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதன் மூலம், `என்ன நடந்தாலும் சரி... நாங்கள் உங்களைப் பாதுகாப்போம்' என்ற மறைமுக உத்தரவாதத்தை ஆளும் தரப்பு தருகிறது. பிறகெப்படி அத்துமீறும் காவலர்களைக் கட்டுப்படுத்த முடியும்?" என்றார் ஆதங்கத்துடன்.

"கோவை டி.ஐ.ஜி விஜயகுமார் தற்கொலையைத் தொடர்ந்து, காவல்துறையினருக்கு விடுமுறை உள்ளிட்ட சலுகைகளை மறுக்காமல் கொடுக்க வேண்டும் என்று காவல்துறையினருக்கு உத்தரவிட்டார் முதல்வர். நிச்சயம் அது பாராட்டப்படவேண்டிய நடவடிக்கை. ஆனால், மக்களைப் பாதுகாக்கவேண்டிய காவலர்கள், அதே மக்களை அடித்துக் கொல்வதையும், தற்கொலைக்குத் தூண்டுவதையும் எப்படிச் சகித்துக்கொள்கிறார்?" என்று கேட்கிறார்கள் சமூக ஆர்வலர்கள்.

அத்துமீறும் போலீஸாரைத் தட்டிவைப்பாரா முதல்வர்?

https://www.vikatan.com/government-and-politics/governance/discussion-about-police-atrocities